# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 5?/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூ௩] யாழ்ப்பாணம்:- கர வருட மார்கழி மீ ௩ உ செவ்வாய்க்கிழமை (18 டிசம்பர் 1951) [இல - எ௨]

# கோவதை புரியுங் கொலை பாதகர்களுக்கு!

## சைவபரிபாலன சபையார் விடுக்கும் வேண்டுகோள்

இந்த உலகத்தில் எண்ணிறந்த உயிர்ப் பிராணிகளை நாம் பார்க்கின்றோம். பிராணி என்றாலே போதும். ஆனால் உயிர் என்பது ஒன்றில்லை என்பாரு மிருக்கின்றனர். காலம் விஞ்ஞானத்திலேறி வருகின்றது. வீழ்ச்சி எழுச்சிகள் மாறிமாறி வரும். பல தேசத்திலும் மக்கள் வசிக்கலாம். மனித உருவம்பெற்ற அளவில் உயர்ச்சி உண்டாய்விடாது. பொதுவாக மனிதர்களின் வாழ்க்கைக்குப் பயன்படுமாறு பலவிதமிருகங்கள் பறவைகள் உண்டாக்கப் பட்டன. ஓரறிவுடைய தாவரங்களால் மனிதர் பெறும் பயன்கள் பல. மிருகங்களில் பசு ஓரினப் படைப்பு. காமதேனுவின் வழி என்று கூறுவர். கபிலை நந்தை பத்திரை சுசீலை சுமனை என்று பேருங் கூறுவர். பசுவின் உடல் முழுதும் தேவர் முனிவர் வசிப்பதாக நூலுமுண்டு.

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா?"

யாரை நோவது? அறிவில்லாத அக்கம் விளங்க ஒரு காலம் வரும். பால் தயிர் நெய் கோசலம் கோமயம் என்பன பஞ்சகெளவியம் என்று கூறப்படும். பஞ்ச—ஐந்து; கெளவியம் - கோவினுடையது. கோ-பசு என்பன ஒரு பொருளன.

இந்த ஐந்து பொருள்களும் சிவாபிஷேகத்திற்கு உரியன இது வைத்தியம், அப்படியா? யோசியுங்கள். சைவம் என்றுலென்ன? கங்காளன் பூசுங் கவசத் திருநீறு அணியும் பாக்கியம் பெறுவதல்லவா? கோமயம் திருநீறாகிறது. பிறவிப்பிணிக்கு மருந்தாவதும் இதுவன்றோ! திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் உடற்பிணி உயிர்ப்பிணி இரண்டையும் திருநீற்றால் நீக்கிப் பாண்டியனை உய்வித்தாரே. பசுவின் மாட்சி இதனாலே உணரலாமே! பின்பு வருவது வாட்டும் என்று மூட்டுவாதம் செய்யலாம். ஆனால் தாயில்லாச் சேயர்களை வாழ்விக்கப் பசுப்பால் உதவுவதும் கண்கட்டு வித்தையா? கோமயம் முதலியன தாவர உணவுச் செடி கொடிகளையும், நெல் முதலியவற்றையும் வளர்ச்சி பெறச் செய்கிறது. ஏதோ கூறுகிறீர், உமது கருத்தென்ன? ஆ! அதை யென் கேட்பான். மனம் துடிக்கிறதே! வாயில்லாத மிருகங்களின் கதி இதுவா? உள்ளத

தொடர்ச்சி 4 - ம் பக்கம்

# புலன் வழிப் போவார் :: புறவிழாத் தேடுவர்

## தம்முள் விழாவின் தனிப் பெரும் தத்துவம்

விழவயர்தலென்பது பண்டைக் காலந்தொட்டு மனித சமூகத்தில் நிலவிவரும் இனிய நிகழ்ச்சியாம். உள்ளத்தில் உவகை தேங்கும்போதெல்லாம் மக்கள் தொகுதி தொகுதியாகக் கூடி ஆடல் பாடல் புரிந்து கொண்டாடுவார்கள். முக்கியத்துவம் நிறைந்த சம்பவங்கள் நிகழ்ந்த திருநாட்களி லெல்லாம் விழவயர்வார்கள். மக்களின் மனதில் ஓர் முக்கிய நிகழ்ச்சியைப் பதிக்கவேண்டுமாயின் விழவயர்தல் வாயிலாக அதனை மிக எளிதாக நிறைவேற்றலாம். கடவுள் வழிபாட்டில் மக்களை ஈடுபடுத்துவதற்காகக் கோயில்களில் ஆடம்பரமாக விழாக்கள் நடைபெறல் கருதப்பாலதாகும். இவ்விழாக்கள் செல்வநிலை பொருள் நிலைமைக்கேற்பச் சிறந்து பொலிவுறும்; இன்னும் அவர் தம் அறிவாற்றலுக் கேற்ப வெவ்வேறு வகைப்படும்; ஜெயந்தி விழா, மணவிழா, பொன்விழா, இசைவிழா, கோயில்விழா எனப் பல்வேறு வகைப்படும். தற்காலத்து கல்வித்துறைகள், கலைத் துறைகளிற்கூட விழாக்கள் இடம்பெற்றுப் பெருகுகின்றன. இவ்விழாக்கள் மனதுக்கும் கண்ணுக்கும் செவிக்கும் இனிய விருந்தாக அமைதலால், செல்வர், வறிஞர், முதியோர், இளைஞர், சிறுவர், சிறுமியர், கல்லாதோரெனு மெய்ப்பாலாரும் இசைந்து கவரப்பட்டு, சாரி சாரியாகப் பந்தி பந்தியாக விழாக்கள் நடைபெறும் இடங்களைச் சென்று சேர்கின்றனர். விழா நிகழும் ஒவ்வோரிடத்திலும் ஐம்பதினாயிரம், அறுபதினாயிரமெனுந் தொகைக்குக் குறையாது நின்று மக்கள் களிக்கின்றனரெனில், விழாவின் பெருமையை — விழா மக்களின் உள்ளத்தில் இடம்பெற்றிருக்குந் தன்மையை அளவிடல் எளிதோ!

மனித சமூகம் முழுவதும் விழாக்களுள் மூழ்கிக் களிகொள்ளும் இவ்வமயத்து விழாக்களுட் தலைசிறந்தவோர் தெய்வீக விழாவினைப் பற்றிச் சிறிது சிந்தித்தல் பொருத்தமானதேயாம். விழாவென்ற அளவிலேயே இவ்விழா யாது? யாரால் நடாத்தப்படுகின்றது? எவ்விடத்தில் எப்போது நிகழும் எனப் பல கேள்விகள் எம் உள்ளத்தில் முகிழ்த்தல் இயல்பே. சிறிதுநின்று சிந்தித்தால் விழாவின் விபரம் நன்கு விளங்கும்.

தலைசிறந்த இத்தெய்வீக விழா தம்முள் விழா எனப் பெயர்பெறும். ஏனைய விழாக்கள்போன்று இஃது சின்னாட் பல்பணிச் சிற்றறிவுடை மக்களால் நடாத்தப்பெறுவதொன்றன்று. பேராற்றலும் பெருங்கருணையும் நிறைந்த ஓர் முதல்வனால் நிகழ்த்தப்பெறுவதாம். இத்தெய்வ விழா நடைபெறுவதைக் கண்டறிந்து யாமும் இப்பெருவிழாவிற் பங்குபற்றவேண்டுமென நம்மையும் அழைப்பவர் ஞானிகளேயாவர். அவர்களால் அருளப்பெற்ற நூல்களெல்லாம் அழைப்புத் தாள்களாகவும் தம்முள் விழவின் நிகழ்ச்சி நிரல்களாகவும் பொலிகின்றன. ஆகவே தம்முள் விழாவின் மாண்பினையுந் தத்துவங்களையும் இனிது நோக்கலாம்.

### உள்விழாவின் உண்மை

தம் — உள் விழா — தமக்குள் விழா அஃதாவது இறைவன் உள் நடைபெறும் விழா என விரியும். அண்ட சராசரங்களிலும் நிறைந்து நிற்பவன் அவன் ஆதலால், அவனுள்ளே நடைபெறும் விழா ஆங்காங்கெல்லாம் நிகழும். இவ்வண்டங்களெல்லாம் பந்தல்களாக வானே முகடாக, பரவெளியே இடமாக சூரிய சந்திர நட்சத்திரங்கள் மணி விளக்குகளாக, இமாலயம் பேராசனமாகத் தம்முள் விழா ஒருகணமும் ஒரு நொடியும் ஓயாது என்றென்றும் நடைபெறும். ஒலிக்கின்ற கடலும் வீழ்கின்ற அருவியும் இசைக்கின்ற நாதங்களும் தம்முள் விழாவின் பெருமையை ஒலிபெருக்கி நிற்பனவாம். ஆதியும் அந்தமுமில்லாத தேவ தேவனே இவ்விழாவிற்குத் தலைமை வகிக்கும் சபா நாயகராவர். தன்னிகரில்லாத் தலைவனுள் அடங்கி நின்று இவ்விழாவில் மும்மூர்த்திகளும் பணி புரிவர். முப்பத்து முக்கோடி தேவர்களும் பணிபுரிவர். நால்வர்களும் பணி புரியும். தேவர்களும் அசுரர்களும் பேய்களும், பூதங்களும் மகிழ்ந்து பணி புரிவன.

"திருக் கூத்து"

இங்ஙனம் சகல உயிர்த் தொகுதிகளும் பணிபுரிய நடைபெறும்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

(சிவதொண்டன்)

இந்து ஆலய, தரும நம்பிக்கைச் சொத்துச் சட்ட வெளியீடு

"இந்து ஆலயங்களும் தரும நம்பிக்கைச் சொத்துக்களும்" என்ற தலைப்புடன் இந்து ஆலய, தரும, நம்பிக்கைச் சொத்துச் சட்டம் (Hindu Temporalities Bill) தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப் பெற்றிருக்கின்றது. பிரதியொன்றின் விலை 70 சதம். தபாற்கூலி 15 சதம்.

பிரதிகள் கொழும்பு அரசாங்கப் பிரசுர விற்பனை நிலையத்தில் (Government Publications, Bureau, Secretariat Colombo) பெற்றுக் கொள்ளலாம்.

அரசியல் அலை

# புத்த மதத்திற்கு அரச தத்துவமா?

## சமயபேதமற்ற - - - - - சனநாயகம் இதுவா?

## பேச்சுப் பல்லக்கு.........'

புத்த சமயத்திற்கு ஒரு புகழ் வேண்டுமாம், அரசாங்க மதமாகவேண்டுமாம். அதற்குப் பிரத்தியேகமான ஓர் அரசாங்க அலுவலாளரும் அதைப் பரிபாலிக்க ஓர் அரசாங்கத் துறையும் வேண்டுமாம். இவ்வாறு ஒரு கூச்சல் கூக்குரல் சிங்களத் தலைவர்களிடையே கேட்கின்றது.

சிங்கள மகாசபைத் தலைவரும் இப்போது கட்டையன் வேடம் மாறிக் கூட்டாற்களன் ஆனற்போன்று பூரண விடுதலைப் புனிதக் கட்சியொன்றை உண்டுபண்ணி அதன் மூலம் இலங்கைவாழ் சனங்களுக்கு ஏதோ இரட்சகராக வந்திருக்கிறேன் என்று மார்பு தட்டி வீரங் காட்டும் திரு. பண்டாரநாயகாவே இந்தப் புத்தமதப் பேச்சை ஆரம்பித்தவர். இடையிடையே அப்படி நான் ஒன்றுஞ் சொல்லவில்லை, புத்தமத பரிபாலனந்தானே நான் கூறிவிட்டது' என்றுஞ் சொல்லிக்கொள்வர். இதற்கிடையிற் பிரதம மந்திரியார் இந்தப் பேச்சை வெறும் பித்தலாட்டம் என்று இகழ்ந்தவர் இஸ்லாமியர் கிறீஸ்தவர்களுக்கு ஆறுதல் சொல்லியுள்ளார்.

தமிழ்த் தலைவர்கள் தங்களுக்குள்ளேயே ஒரு போலிச் சண்டையையும் போலி வாக்குவாதத்தையும் எவ்வளவுஞ் செய்யலாம, புத்த சமயிகளுக்கு இதுபோன்ற ஒரு உணர்ச்சியை ஊட்டிவிட்ட பின்பு இந்துக்கள் இஸ்லாமியர் கிறீஸ்தவர் என் செய்வார்கள். ஒருமுறையில் சமய பாதுகாவலனாக சமசமாஜக் கட்சியினரின் பரம விரோதியாகவும் இன்னொருமுறை அரசியல் நிபுணராகிப் பிரதம மந்திரி கட்சியினரை அகற்றிவிடச் சமய உணர்ச்சி யற்ற சமசமாஜக் கட்சித் தலைவருடன் கூடிக் குலவிக் கொண்டாடி உயிர்த்தோழமை பூண்டு காட்டின பரிபாலகராகவும் தோன்றும் இவ்விருதலைக் கொள்ளியினராம் திரு பண்டாரநாயகவை நம்பி அவர்பால் நாட்டங்கொள்ளும் தமிழர்கள எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பது சொல்லாமலமையும்.

## அவனருளே கண்ணாகக் காணினல்லால் ... ...

திருச்சிற்றம்பலம்

மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி
மயானத்தான் வார்சடையா னென்னினல்லான்
ஒப்புடைய னல்லனொருவ னல்லனொரு
ரனல்ல னொருவ னில்லி
அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு
மவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே


# இந்துசாதனம்

யாழ். கர ௵ மார்கழி ௴ ௩ ௳ செவ்வாய்க்கிழமை


## இருந்த இடத்தில் :: :: வேலை என்றால்...?

பல்கலைக்கழகப் பட்டம் பெற்று ஆசிரியத் தொழிலில் அமர்ந்த ஒரு தேசாபிமானி தமது இளம் வயதிலேயே பரோபகாரப் பெருவிருப்பால் இரணைமடுப் பகுதியில் காடுவெட்டி மேடு சொத்தி கமச் செய்கையை விருத்திபண்ணப் பாடுபட்டு ஒரு சங்கத்தை நிறுவி அரிய முயன்று வந்தார். அது முப்பது ஆண்டுகளுக்குமுன்பு அவருக்குதவி யளிக்க ஆரும் முன்வந்திலர். அந்நிய அரசாங்கம் உற்சாகம் கொடுக்கவில்லை. சங்கம் சீர்குலைந்தது. அப் பெரியாரும் தமது பணத்தையும் நேரத்தையும் தேக நிலைமையையும் இழந்து கவலைப்பட்டனர். இவ்வளவுதான் நற்கருமங்களுக்கு, நாட்டின் நலன்கருதிய பணிகளுக்கு ஆதரவு என்பதை எவருமறிவர்.

யாழ்ப்பாணக் குடாநாடு நிலப்பரப்பாற் குறைந்தும் குடிசனப்பெருக்காற் கூடியும் உள்ளதென்பது யாவருந் தெரிந்த விஷயம். நிலப்பரப்பு ஒரே நிலையிலிருக்கக் குடிசனப்பெருக்கம் ஆண்டாண்டுதோறும் அதிகரித்துக்கொண்டு வருவது உண்மை. இவ்வாறாக யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் இந்தக் குடாநாட்டிலேயே இருந்து தமது சீவியத்துக்கு உழைத்துவிடலாமென்று நம்பியிருப்பதையும், அவ்வித எண்ணத்தையுங் களைந்து எவ்வாற்றானும் இலங்கையிலுள்ள ஏனைய பாகங்களுக்குச் சென்று கமத்தொழிலோ வியாபாரமோ வேறுபணிகளோ செய்யவேண்டிய அத்தியாவசியம் என்பதை விளக்கவும் குடிசனங்கள் விளங்கி அம்முறையைக் கையாளவும் செய்யுந் தொண்டொன்றை விட்டுவிட்டு எங்கள் நாட்டுத் தலைவர்கள் மேடை மீதும் பத்திரிகை வாயிலாகவும் தலைமைப் பதவிக்குப்பெரும் போட்டியிட்டு வருகின்றார்களே!

கிளிநொச்சி, மன்னார், அநுராதபுரம், தம்பலகாமம், கல்முனை முதலிய இடங்களிற் கமச் செய்கையைச் சிறிதளவு செய்து வருகின்றார்கள் யாழ்ப்பாணத்தவர்கள் என்றால் இவர்களெல்லாம் அவ்வப் பகுதிகளில் அரசினர் உத்தியோகத்தமர்ந்ததாலோ அன்றி வேறு சில தொடர்புகளாலோ நிலங்களை வாங்கி நெற்செய்கைக்குக் குத்தகைக்குக் கொடுத்திருக்கின்றார்களேயன்றி கமக்காரர் என்ற வகுப்பினரைச் சேர்ந்தவர்களல்ல.

கமஞ் செய்தாலும் கைத்தொழில் புரிந்தாலும், அன்றி வியாபாரஞ் செய்தாலும் இக் குடாநாட்டிலேயே இருந்துவிடவேண்டுமென்று கமக்காரர் நினைக்க, இளைஞர்கள் கற்றுவிட்டோம் எங்களுக்கு மாதச் சம்பளமும், உபகாரச்சம்பள உரித்தும்உடைய அரசாங்க வேலையே வேண்டுமென்று நின்றுவிட, எங்கள் நாட்டவர்களின் பொருளாதார நிலை எங்ஙனம் விருத்தியடையும்? இக் குடாநாட்டிற் கமத்தொழில் இதுவரை ஏராளமான பயனைக் கொடுத்ததாகத் தெரியவில்லை. உண்ண உணவைத்தானும் போதிய அளவு பெற்றிலர் கமக்காரர். மழையின்மையாலும் நிலப் பண்பை நெறிப்படுத்தாமையாலும் கூப்பாகங்களில் நீர்வளம் இல்லாமையாலும் பெரும்பான்மையான கமச் செய்கைக்குச் சௌகரியங்களில்லையென்பதை எவருமறிவர். ஆகவே இலங்கையிலுள்ள மறு பாகங்களுக்குச் சென்று வாழ்க்கைக்குரிய வசதிகளை உண்டுபண்ண வேண்டிய தவசியமாகின்றது. வட மாகாணத்தில் ஏராளமான காட்டு நிலங்களுண்டு. இவற்றை எல்லாம் சீர்திருத்திப் பண்படுத்திப் பயிரிடுவதற்கு என்னென்ன ஏற்பாடுகளை எங்கள் தலைவர்கள் செய்திருக்கிறார்கள்? இருந்த இடத்தில் வேலை என்றால் எங்கள் வீட்டாரும் இசைவர் என்றாங்கு இளைஞர்கள் ஒருவித சிரமமுமின்றி உழைப்பை எதிர்பார்க்கின்றனர். காட்டுக் காய்ச்சல் என்ற சாட்டுச் சொல்ல இப்போது முடியாது. நுளம்பின் கொடுமைகள் முற்றாக நின்றுவிட்ட தெனலாம். நீர்ப்பாய்ச்சல் வசதிகளும் கூடுதலாகிவிட்டன. ஆகவே எங்கள் ஊரவர்கள் 'திரைகடலோடியும் திரவியந்தேடு' முற்படும் மனப்பான்மையைக் கொள்ள வேண்டும்; அவர்களுக்கு அவ்வித எண்ணத்தைத் தலைவர்கள் உண்டுபண்ண வேண்டும். 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்' என்று வீரகவி பாரதியார் பரோபகார ஆஞ்ஞை விடுத்தார். காந்தியடிகள் தமது தேசத் தொண்டை நாட்டிலும் நாட்டு மக்களிடையேயும் செய்கையிற் காட்டினரேயன்றிப் பேச்சிலும் பிரசங்கத்திலும் வீண்காலங் கழிக்கவில்லையே. தலைவர்களே! இனியாவது செய்யுங் கருமமிது என்பதை யறிந்து உண்மைத் தொண்டு புரிவீர்களா?

## இந்து ஆலயச் சொத்துப் பரிபாலனச் சட்டம்

கொழும்பு திரு. S. சிவசுப்பிரமணியம் அவர்களின்
### சில அபிப்பிராயங்கள்

இப்பொழுது இலங்கைப் பாராளுமன்றத்தில் ஆலோசித்துப் பரிசீலனை செய்து அங்கீகரிக்கப்படப்போகின்ற இந்து ஆலயச் சொத்துப் பரிபாலன சட்டத்தைப்பற்றிச் சில கருத்துக்களைப் பொதுவாகச் சைவ மக்களினதும் சிறப்பாக இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தவர்களினதும் யோசனைக்காகக் கூற விரும்புகிறேன். மேற்படி சட்டப் பிரதியின் சாரத்தையிட்டு ஈண்டு நான் ஒன்றுங்கூற முன்வரவில்லை. சைவ மக்களுக்கும் பாராளுமன்றத் தலைவர்க்கும் அரசினருக்குமிடையே இப்போ நிலவிவரும் ஒற்றுமை இச் சட்டத்தினால் பாதிக்கப்படக்கூடாதென்ற நோக்கத்துடன் இதனை எழுதுகின்றேன்.

இப்பொழுது ஆலோசிக்கப்பட்டு வரும் அறிக்கை வெளிவந்த தேதிக்கும் பாராளுமன்றத்தில் ஆலோசிக்கப்படும் தேதிக்குமிடையிலுள்ள காலம் மிகவும் சொற்பமாகும். இச் சொற்ப காலத்தில் சைவ மக்களும் பாராளுமன்ற அங்கத்தவர்களும் அதனைப் படித்துணர்ந்து சிந்தித்துத் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க இயலாது. இவ் விஷயத்தில் இந்துக்களாகவுள்ள பாராளுமன்ற அங்கத்தவர்கள் கருத்து மாத்திரம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. பொதுவாகச் சைவசமயிகளுடைய கருத்துக்களும் கட்டாயமாக யோசிக்கப்பட வேண்டும். பாராளுமன்ற அங்கத்தவர்களும் அவர்களுடைய கருத்துக்களையே அநுசரிக்க வேண்டிய கடமை பூண்டுள்ளார்கள்.

இந்து ஆலயச் சொத்துப் பரிபாலனச் சட்டத்தாற்பாதிக்கப் படுகின்றவர்கள் பெரும்பான்மையும் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களே. அவர்கள் இச்சட்டத்தின் சாரத்தை நன்கு தெளிவாக உணரவேண்டும்.

பொதுஜனங்கள் இச் சட்டத்தைச் செவ்வனே படித்துத் தங்கள் கருத்துக்களைப் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு அனுப்பப் போதிய காலம் கொடுக்கவேண்டும்.

இந்து ஆலயச் சொத்துக்களைப் பாதுகாக்கவேண்டியது அவசியமே. அங்ஙனஞ் செய்தற்கு இந்துக்களும் துணைபுரிய வேண்டும். எவ்விதம் மேற்படி ஆலயச் சொத்துக்களைப் பரிபாலிக்க வேண்டும், எவ்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## இராமநாயக நிதி

இந்நிதிக்குச் சேரும்பொருட்டுக் கெலந்தனிலுள்ள கோட்டபாறு (Kotabharu Kelantan Malaya) என்னுமிடத்திலிருந்து திரு. ஆ. வ. நாகரத்தினம் அவர்கள் அநுதாபத்துடன் அனுப்பிய ரூபா பத்தையும் (10) நன்றி யறிதலுடன் ஏற்றுக் குறித்த நிதிக்கு அனுப்பியிருக்கின்றோம். (ப-ர்)

தொடர்கதை

## இன்பத்தின் நிலை இதுதானா?

இறை ஒளி

[ 2 ]

### "நாகரிகச் சுழல் காற்று"

'அப்பா வருகிறேன்' என்ற அமுத மொழிகள் காற்றிற் பறந்து சங்கரர் காதிற் படிய முன்னரே பங்கஜத்தின் மதிவதனம் மூன் அறையில் முழுநிலா வீசினாற்போன்று தோற்றியது. தந்தையாரின் தத்தளிக்கும் மனமும் சாந்தியடைந்துவிட்டது போலிருந்தது. தகப்பனுக்குரிய வணக்கங் காட்டிய மகளைப்பார்த்துக் கூறுவார் சங்கரர். பங்கஜம், உனது வருங்காலம் உன் கையிலேயே இருக்கிறதென்பதை உணர்ந்து நடந்துகொள்ள உனக்குப் பருவம் நல்லாய் வந்துவிட்டது. குடிகுலத்திற் பிறந்த பழமை வாய்ந்த பரம்பரையிலுதித்த உனக்கு அத்தகைய நல்லுணர்ச்சி இயல்பாகவே எழும் என்று சொல்லவும் வேண்டுமா? எது நல்லது எது தீயது என்று ஆராய்ந்தறிந்து தந்தை சொல்வதை மைந்தர் சிரமேற்கொண்டு சிந்தை செய்துவிட்டால் அதுவே அக் குடும்பத்தின் சிறப்புக்குஞ் சீருக்கும் அடிப்படையாய்விடும். அவ்வாறே நாங்களும் எங்கள் சிறுவயதில் நடந்து வந்தோம். எங்கள் மூதாதையரும் அவ்விதமே நடந்து வந்தனர் என்பதை அவர்களின் வாழ்க்கை வளத்திலிருந்து கண்கூடாகக் கண்டறிந்தோம். அருமை மகளே! நான் அதிகமாய்ப் பேசவேண்டியதில்லை இக்காலமோ சுழல்காற்றுக் காலம். நாலுபக்கங்களிலுமிருந்து நாகரிகமென்னும் நவமான காற்று வீசிக்கொண்டோடிவர மனிதர்கள் சுழன்று சுழன்று தடுமாறித் தத்தளிக்கிறார்கள். ஓர் ஒருகால் ஒன்றையும், இன்னொருகால் வேறொன்றையும் நன்றென்று நினைப்பர். நினைத்து தங்கள் சாதிசமயக் கொள்கைகளையும், மூதாதையர் தம் முறை நெறிகளையும் மறந்து புதுப்புது விதமாகச் சிந்திக்கவும் செய்கை முறையில் வைக்கவும் ஆரம்பித்து விட்டார்கள். இதன் விளைவு இது பொழுது தெரியவாரா. இன்பம்போல மூச்சு கொடுத்துத் துன்பத்தை விளைவிக்கும். இறைவனையே மறந்துவிடவுஞ் செய்யும், அன்றியும் இறைவன் என்று ஒரு பரம்பொருள் உண்டா இல்லையா என்ற சந்தேகத்தையும் உண்டு பண்ணிவிடும். இங்ஙனம் சுழல்காற்றினால் தாக்கப்பட்ட துரும்புபோல இங்கும் அங்கும் எங்குமாய் இலக்கின்றி அலையச் செய்துவிடும், என்று பேசப் பேசத் தொனியும் சுவையுங்கூட்டும் பிரசங்க சண்டமாருதம்போன்ற சங்கரர் தம்மை மறந்து மேடைமீது நிற்பார்போன்று உற்சாகங்கொள்ளும் உமையம் குயில்மொழிக் குமரன் பங்கஜம், இளமைக்குரிய பொறுமையின்மையைக் காட்டிவிட்டாள்போன்று இடையிட்டு இயம்புவாள்.

அப்பா என்ன அழகாகப் பேசுகின்றீர்கள். இதெல்லாம் எனக்குச் சொல்லவேண்டியதெதற்காகவென்று தெரியவில்லையே. கட்டுரையாக எழுதிப் பத்திரிகையிற் பிரசுரிக்கலாமே என்று மழலைவிடம் பேசிய அச் சங்கரருக்கு மறைந்த கோபம் மறுபடி பொங்கத் தொடங்கியதும் ஆத்திரங் கொண்டார் என்ன ஆற்றுவர். கையிற் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா என்று காட்டிவிட்டாய் பெண்ணையின் போக்கு எவ்வாறு மாறிவிட்டதென்று தெரிந்துவிட்டதே. தன்மொழிதனைக் கேட்டு இனைப்புறச் செவிகள் எவ்வாறு ஒருப்படும். இசைந்தட்டுப் பாதாட்டியம் அல்லாதவை வெறுப்புக் குரியனவாய்த் தோன்றும் என்பது புலப்படுகின்றது.

### "போதும் போதும் புதுக்குளத்து வேளாண்மை"

தந்தையுடன் வாதாடும் தைரியத்தைக் கொடுத்துவிட்டதே தற்கால கல்வி. 'நான் சுருக்கமாகச் சொல்லக்கூடியது ஒன்றுதான். இந்த மாதிரிப் பாட்டும் பரதநாட்டியமும் பழகவும், பழகி வீட்டை விட்டு வெளியே வீண் களியாட்டங்களிற் காலத்தைக் கழிக்கவும் நான் உனக்குக் கல்வி பயிற்றுவிக்கவில்லை. பயிற்றப்போவது மில்லை. நாளை தொடக்கம் பள்ளிக்கூடம் போகின்றதைத்தானும் நிறுத்திவிடு. வீட்டில் இருந்து வினைபாடினாலுஞ் சரி, விருப்பமானபடி பாட்டுப்பாடி ஆட்டமாடி எதை வேண்டுமென்றாலுஞ் செய். வீட்டுவேலை செய்யாதுவிட்டாலுங் கவலையில்லை. போதும் போதும் புதுக்குளத்து வேளாண்மை என்று சொல்லிக்கொண்டு வெளியே செல்லப் புறப்பட்ட சங்கரரைப் பூதத்தம்பி புன்முறுவலோடு கையிற் பிடித்துக்கொண்டு சொல்வர். பிள்ளையின் உள்ளத்தை இப்படியாகப் பொன்னென உடைத்துவிடக் கூடாது. அவளும் உங்களைப் போன்ற உங்கள் உயர்ந்த சந்ததியாரைப் போன்று இயல்பாகவே அறிவிற் சிறந்தவள். எதுவும் அடாதது செய்யவும் மாட்டாள் செய்யத் துணியவும் துணியாள். சின்னஞ் சிறுசெடி, செழிப்பாய் வளருகிறது. அச்செடியை நீங்களாக வாடச் செய்வது தகாது. இருங்கள். ஆறுதலாக அமருங்கள் என்றுவிட்டுப் பங்கஜத்தைப் பார்த்து உன்னுடைய எண்ணந்தான் எது என்பதைச் சொல் என்று சமரசம் பேசினார். தைரியம் கொண்ட பங்கஜம் சொல்லுவாள்.

(தொடரும்)

## இந்து ஆலயச் சொத்துப் பரிபாலனச் சட்டம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

கொவ் விஷயங்களில் அரசினர் இதில் தலையிடலாம் என்பது பற்றியும் வரையறை செய்ய வேண்டும். சமயாசாரங்கள் பூசை முறைகள் சமய உண்மைகள் பரம்பரையான சமயப் பழக்க வழக்கங்கள் இச்சட்டத்தினுல் சிறிதளவும் பாதிக்கப்படாமல் காக்கப்படல் வேண்டும். இவ்விஷயாக சோல்பறி விசாரணைச் சபை கூறிய கருத்துக்களும் எங்கள் பிரதம மந்திரியார் கூறிய கருத்துக்களும் ஊன்றிச் சிந்திக்கவேண்டியவைகளேயாகும்.

முக்கியமாகத் தமிழரல்லாத பாராளுமன்ற அங்கத்தவர்கள் இந்துசமயத் தலைவர்களது கருத்துக்களைப் பாராளுமன்றத்திலும் பிறவிடங்களிலும் நன்றுகக் கேட்டுச் சரியான முறைகளை எவ்விதம் எப்பொழுது கையாளவேண்டுமெனச் சிந்திக்க வேண்டிய கடமை பூண்டவர்கள்.

இந்தச் சட்டத்தைத் துரிதமையில் பாராளுமன்றத்தில் யோசித்தலைப் பின் போடலாம். இதனை இப்பொழுது நிறைவேற்றி அரசாங்கச் சட்டமாக்குதற்கு அவசரப்படத் தேவையில்லை. விரும்பினுல் அரசினர் இதனை அடுத்த தேர்தலின் பின்னர் கிறைப் பெறும் பாராளுமன்றத்தில் இதனையே சித்துச் சட்டமாக்கலாம்.

## இயற்கை மிருகக்காட்சிவனம்

ஸ்கொட்லாந்தில் வன மிருகங்களை வைத்துப் பாதுகாப்பதற்கு வனமொன்று இப்பொழுது அமைக்கப்படுகிறது. இவ் வனத்திலே செம்மான், கலைமான், கஸ்தூரிமான, தங்க கிறக்கழுகு போன்ற பலவகையான பிராணிகள வளர்க்கப்படுகின்றன.

## இந்தியாவுக்குத் துவிச்சக்கரவண்டி ஏற்றுமதி

இந்த ஆண்டு இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு 30363 துவிச்சக்கரவண்டிகள (cycles) ஏற்றுமதி செய்யப்பட்டன.

## தேவை

தெல்லிப்பழை ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கத்திற்கு ஓர் மனேஜர் தேவை. ஆங்கில 7-ம் வகுப்பில் சித்தியடைந்தவராயும் 35—50 வயது உடையவராயும் இருத்தல் வேண்டும். வெற்றிலை விற்பனையில் அனுபவம் பெற்றவராயிருப்பது நலம். சம்பளம் ரூபா 125. (சகாயப் பணம் உட்பட) பிணைப்பணம் ரூபா 10 0 ரொக்கம்.

விண்ணப்பம் 5—1—52 க்கு முன் தலைவருக்கு றிஜிஸ்ரர் கடித மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

ச. தம்பு கனகரத்தினம்
தலைவர்

பழவீடு
இளவாலை.
17—12—51.
M 157 18—12—51.

## சாவகச்சேரி இந்துக்கல்லூரிப் புதிய மாணவர் சேர்ப்பு

மேற்படி கல்லூரிக்குப் புதிய மாணவர்கள் 31-12-51 திங்கட்கிழமை, காலை 9 மணி தொடக்கம் சேர்க்கப்படுவார்கள். பள்ளிக்கூட விடுகைப் பத்திரமும், பிறப்பத்தாட்சிப் பத்திரமுங் கொடுத்து, முதற் றவணைப் பணமுங் கட்டிச் சேர வேண்டும்.

A. S. கனகரத்தினம்
அதிபர்.

M. 158 18-12-51.

## வெங்காயமும் உருளைக்கிழங்கும் வரவு

மத்திய கிழக்குப் பகுதிகளிலிருந்து 700 தொன் வெங்காயம் கொழும்புக்கு வந்துவிட்டது. இன்னும் 1700 தொன் வெங்காயமும் 500 தொன் உருளைக்கிழங்கும் நத்தார் தினத்துக்கு முன் வருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஆசிரியர் சம்பளம்

தமிழ், சிங்கள ஆங்கில ஆசிரியர்களாகிய யாவருக்கும 2 ந் திகதிக்குமுன் சம்பளம் கொடுபடக்கூடிய ஒழுங்கு ஒன்றை வித்தியாதிகாரி செய்திருக்கின்றார்.

புற்றளைச் சாரதாபீட வித்தியாசாலை அல்லது வராத்துப்பளை கலவன்பாடசாலை தர்மகர்த்தாக்கள் சபையின்
18-11-50 தொடக்கம் 13-12-51 வரையுமுள்ள

### வரவு செலவுக் கணக்கு

| | வரவு | செலவு. |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| பாடசாலை வெள்ளையடிப்பும் கட்டிடத் திருத்தங்களும் | | 182 20 |
| தர்மகர்த்தாக்கள் சபைக்குக்கொப்பிப்புஸ்தகங்கள் | | 5 — |
| அச்சுக்கூலி | | 13 — |
| பாடசாலைப்பாவிப்புக்கு வெள்ளைக்கட்டியும் கொப்பி புஸ்தகமும | | 14 — |
| பாடசாலை கூட்டித் துப் பரவுசெய்தவகைக்கு | | 11 — |
| பாடசாலை வேய்தலுக்கு கிடுகும் வேய்தலுக்கு கூலிவகையும் | | 2̣5 32 |
| வேலி அடைப்பும் கூலிவகையும் | | 92 73 |
| தென்னைமரம் தறிப்பதற்கு நஷ்டங்கொடுத்தவகை | | 100 — |
| கிணறு திருத்தச்செலவுவகை | | 499 95 |
| பிள்ளைகளுக்குக் குடிக்கத் தண்ணீர் அள்ளி வைத்தகூலி | | 120 — |
| கறகூச வரி | | 38 — |
| மகாசபைத் தனாதிகாரியிடம் | 1371 93 | |
| கையிருப்புப் பணம் | | 85 78 |
| | 1371 93 | 1371 93 |

க. சேனாதிராசா
மேற்படி சபையின் கௌரவ காரியதரிசி—
தனாதிகாரி.

சரியென அத்தாட்சிப்படுத்தப்பட்டது.
சு. பொ. கந்தையா F. I. S. A. (Lond.)
பகிரங்கக் கணக்குப் பரிசோதகர்.
15—12—51.

M, 156 18, 21—12—51.

# தெய்வத் தமிழன்னை தெருவில் நிற்பளா?

## அன்னை அருள் பெரு - - மாக்களாகவா?

### மக்கள் ஒரு குடும்பத்தினர்

உலகுக்கு முழுமுதற் பொருள் ஒன்று உண்டு. இங்கே உலகு என்றது அவன் அவள் அது என்று சுட்டி அறியப்படும் அறிவு உள் பொருள், அறிவு இல் பொருள், ஆகிய எல்லாவற்றையுமென்க. இவை சித்து, சடம் எனப்படும். சித்துப்பொருட் டொகுதியுள் மனமக்கட்பிறவியெடுத்த ஆன்மாக்களாகிய நாம யாவரும் வருகின்றோம். நாம் யாவரும் என்பது, இத் தேசத்தினர், இம் மதத்தினர், இம் மொழியினர் என்னும் பிரிப்பின்றி யாவரையுந் தொகுத்துக் குறிக்கும். எனவே, முழுமுதற் பொருளெனப்படும் ஆண்டவன் தப்பனுக்கு நாம் யாவரும மக்களாகி ஒரு குடும்பத்தினராகிறோம்.

### அறிவுத் தராதரத்துக்கு ஏற்ற மொழி

எங்கள் பெற்றோர் எங்கள் வயசுக்கேற்ற உணவு, கல்வி, ஆகியவற்றை எமக்குத் தருகிறார்களல்லவா? கல்வி என்பது அறிவு வளர்தற்கு உதவ அமைந்த ஒன்று எனபதை நாம் அறிவோம். இக்கல்வித்துறை ஒரு தன்மையதாய் ஒரு அளவினதாய், யாவருக்குந் தரப்படுகிறதா? இல்லை. வயசுக்கும், இயல்புக்கும் ஏற்றவாறே. ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். ஓர் குடும்பத்தில் பத்துச் சகோதரர்கள் இருக்கிறார்களென வைத்துக்கொள்வோம். இவர்களுள் இளைஞரயினோர் முதல், இரண்டு முதலிய வகுப்பினராயிருக்க, மூத்தோர் பண்டிதராயிருக்கின்றார். இவரை ஓர் அறிஞன் என்று சொல்லுவோமாயின் மற்றவர்களை அறிவிலர் என்று கருதுவதா? இல்லை. அவர்கள் தங்கள் வயசுக்கேற்ற வகுப்புக்களில் படிக்கிறார்கள். அவர்களும் பண்டிதர்களாகலாம். அதுபோலவே பல்வேறு பிரிவினராய் வாழுகின்ற மக்களுக்கும் அவரவர் அறிவு வளர்ச்சிக் கேற்றபடி, அந்தந்த நிலைக்கு மேல் வேண்டப்படுகின்ற அறிவைத்தரும் மொழி அமைந்திருக்கின்றது. இதனை மேலும் ஆராய்வோம்.

### மொழிகளின் சிறந்த பண்பு

உலகின்கண் உள்ள மொழிகளெல்லாம இன்ன இன்ன தன்மையனவென்று அறிந்து சொல்லுதல் எம்மால் இயலாது. ஆயினும இன்றைய உலக மக்களின் தன்மையை உற்று நோக்கும்பொழுது, ஒரு மொழியையுடைய தொகுதியினர் எவரோ அவருக்கு அவர் மொழி ஓர் தனிச் சிறப்பைக் கொடுக்கின்றதென்று துணிந்து கூறலாம்.

வைதிக சைவம் ஆரியத்திலிருக்கின்றது. தமிழில் சைவசித்தாந்தம் விளங்குகின்றது. ஆங்கிலமோ இக்காலத்தவர் விழைகின்ற பல கலைகளை விளக்குகின்றது. இவ்வாறே ஏனைய மொழிகளும் அம் மொழிகளையுடையாருக்கு ஒவ்வோர் தனிச் சிறப்பைக் கொடுக்கும் என்பது பொருந்தும்.

### தமிழின் சிறந்த பண்புகள்

#### (1) இனிமை

இவ்வாறு நோக்கும் பொழுது தமிழ் என்ன தன்மையது என்று பார்ப்போம். இது ஒப்பில்லா இனிமைப் பண்புடையது. இனிமைப் பண்பு உள்ள நெகிழ்ச்சியை ஆக்குதற்கு ஒப்பில்லாதது. உள்ள நெகிழ்ச்சியோ பக்தி வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்து நின்று பக்தி முதிர்ச்சியின் அறிகுறியுமாகின்றது. பக்தி முதிர்ச்சி ஞானத்தை நல்கும். ஞானம் வீட்டைத் தரும். வீடே மக்கட்பிறவியின் நோக்கம். எனவே இனிமைப் பண்பு வீட்டைத்தருந் தன்மையது என்பது பெறப்படும். இந்த உரியபண்பு தமிழ்மொழிக்கே

**அருட்கதிர்**
... எழுதுவது ...

உரியது. 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்'' என்ற பாரதியார்தந்த பொன்மொழிகள் இதனை வலியுறுத்துதல் காண்க.

#### (2) பண்புதிரியாது நிலவுதல்

உலகின்கண் இது நிலவுதல் இதன் மற்றொரு தன்மை. வைதிக சைவத்தை உலகுக்குக் காட்டியமொழி ஆரியம் என்று கூறினோம். மொழிகளுள்ளே ஆரியம் ஒன்றே தமிழுக்கு ஒப்பாய்க் கூறப்படும். இஃது இன்று வழக்கிழந்து நிற்றல் கண்கூடு. பிற மொழிகளெல்லாம் தோன்றி நிலைதளர்ந்து அழியுந்தன்மையனவாக தமிழ் மொழி மாத்திரம் இளமை குன்றாது நிலவுகின்றது, இவ்வாறு நிலவுதல் அறிஞர் தவத்தாலும் முழுமுதற் கடவுளின் திருவருளாலும் என்று பாரதியார் அழகாகக் கூறும் கூற்று இங்கே அனைவரும் உற்று நோக்கவேண்டிய தொன்று

கன்னிப் பருவத்தில்
அந்நாள்—என்றன்
காதில் விழுந்திசை மொழி
[யெல்லாம்
என்னென்னவோ பெயருண்டு—
[பின்னர்
யாவும் அழிவுற்றிருந்தன கண்டீர்
தந்தை அருள்வலியாலும்—முன்பு
சான்ற புலவர்தவ வலியாலும்
இந்தக் கணமட்டுங்காலன்-என்னை
ஏறிட்டுப்பார்க்கவும் அஞ்சியிருந்
[தான்

இவ்வாறு பல சிறப்புகளை எடுத்துக் காட்டலாம். அவற்றுள் இன்னும் ஒன்றைமாத்திரம் எடுத்துக்காட்டி மேலே செல்வோம்.

#### (3) அருள்வழிகாட்டி முந்தியளித்தல்

மக்கட்பிறவி எடுத்த நாம உலகின்கண் உள்ள உயிர்த்தொகுதிகள் எல்லாவற்றுள்ளும் மேலான சக்திவாய்ந்தவர்களாயிருப்பதைக் காண்கிறோம். எல்லாவற்றையும் ஆளுந்தன்மையாயுமிருக்கிறோம். இத்... ...ளதனால், சிற்சில சமயங்களில், எம்மை ஒப்பார் யா... ...மில்லை, எம்மால் எதுவும் ஆகும் என்று நாம் கர்வங் கொள்ளுவதுண்டு. இத்தகைய கர்வத்துடன் வாழுங்காட்களில் நாம் எவ்வளவுக்கு முயன்று ... விரும்பியது கைகூடாது வருந்தும காலங்களும் வருவதுண்டு. இப்படி வரும்பொழுது எ... ...மால் ஆவதொன்றில்லை, இறைவா என்று எம்... நோக்கி இறைவனை வேண்... வருந்துவதுமுண்டு.

இவ்வித உணர்ச்சி நிகழு... காலத்தில் "தனக்குவமை இல்லாதான் றாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றலரி(து)" "வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க் கியாண்டும் இடும்பையில" எனத் தெய்வப் புலவர் தந்த அருள் மொழிகள் அரிய உண்மையைக் காண்பிப்பனவாயும் அளவிலா இன்பம் பயப்பனவாயுமிருந்து எமக்கு இறைவனுக்குமுள்ள தொடர்பை ஒருவாறு விள... ...கும். இத்தகைய நிலைமையில் மனம்வாக்... குக்காயங்கள் இறைபணியிற்கு... இயல்பினவாகும்.

"மானுடப் பிறவி தானும்
வகுத்த(து)
மனம் வாக்காயம்
ஆனிடத் தைந்து மாடும்
அரன்பணி(க்)
காகவன்றோ" (சி. சி.)

என்பது இனிதாயமையும். இவ்வாறு மக்கள் வாழ்க்கையின் தன்மையைப் படிப்படியா(க உ)ணர்ந்து வருதலும் "வே(த)நான்கினு மெய்ப்பொருளாவ(து) நாதனும நமச்சிவாயவே" என்னுந் திருவைந்தெழுத்தின் ... தெளிபொருளாகும். இவ்வா(று) அருட்பிரகாசம மேன்மேலும் வளர்ந்து ஐந்தெழுத்தே தெழுத்தாகுந் தன்மை கண்(டு) சகசநிட்டை சித்திக்கும் வழி(யு)யும் தெரியவரும். சகசநிட்டை சிவன் முத்தர் நிலையாகும். எனவே, மக்கள் வாழ்க்கையின் இலக்காகிய இகபர முத்திகள் எய்துதல் காண்க.

### தமிழ் மொழி தெருவில் நிற்க மக்கள் மாக்களாகவா?

"பல கலை ஆகம வேத... யாவையினுங் கருத்துப் பதி... பாசந் தெரித்தல்" (சிவப்...)

எனவே, உலகின் கண் உள்ள கலைகள் முதலிய எல்லா... ...றின் உட் கருத்து, மக்கள் வாழ்க்கையின் உண்மைத் தன்மையைக் காட்டுதலென்பது பெறப்படும். ஆங்கிலம் முதலிய மொழிகள் இக்காலக்கலைகள் பலவற்றை நன்கு தரு... ...கின்றனவேயன்றி, ஆன்மநிலையைத் தமிழ் மொழிபோற்காட்டுந் தன்மையனவல்ல. இத்தகைய மொழி எங்கள் நாட்டில் ... ...கும் நிலவாது இன்றைய அ... சாங்கம் வகுப்பதுபோல் ஒ... ...ங்கி நிற்குமேயானுல் இம்மொழியினராகிய நாங்கள் யாவரு(ம்) அருள் வழிமாறி மருள் வழி(ச்) சென்ற உருவில் மக்களெனி(னு)னும் அறிவில் மாக்களாவோம். இத்தகைய நிலை... எய்த விட்டுவிடாது, தெய்வத் தமிழ் மொழி நாடெங்கும் நிலவுமாறு இறைவனை வேண்... உழைக்கவேண்டியது ஒவ்வொருவருந் தமிழ்மகன்மீதும் பொறுத்திருக்கும் பெருங் கடனாயிருக்கின்றது.

## கோவதை புரியுங் கொலை பாதகர்களுக்கு

1-ம் பக்கத் தொடர்ச்சி

துக் கள்ளம் கடவுளும் அறிய மாட்டாரா?

மனிதர் நன்றி மறப்பதில்லாத உத்தமர் என்பது வெளிப்படை. பசு பால் தரும் வரையில் அதனைப் பாதுகாக்கின்ற மனிதர்கள் பால் வற்றியவுடன் தெருவழியே அவைகளை அலைய விடுகின்றனர். இதுவும் நல்லதுதான! நன்றிகெட்டு அப்பசுக்களைக் கொலைக்காரர் கையில் அஞ்சாதும் ஆலோசியாதும் விற்றுவிடும் மனிதர்களும் இருக்கின்றார்கள். ஒரு பசு வேண்டும் என்ற கேள்வி கேட்டவுடன் நாட்டை விட்டுச் சென்ற ஞானப்பிரகாச முனிவர் பிறந்தது யாழ்ப்பாணம் அல்லவா? சிவநெறியும் சிவகருணையும் குடிகொண்ட யாழ்ப்பாண மாநகரப் பெரியோர்களே! செந்தமிழ் நங்கை நடனமிடு செம்மைத் திருவுடைய சீரியோர்களே! பசுவைப் பாமரர் எது செய்தாலும் செய்யலாம்! கனிந்த உள்ளமுடைய நீங்கள் உயிர்க்கொலையினிமித்தம் சிறு பொருளுக்காக விற்க முன்வாராதிருக்க வேண்டும். மிருகங்களை வருத்தாதிருப்பதும் பெரும் புண்ணியம். நந்தியும் காமதேனுவும் ஆண்மகாதரின் கருணையாற் போந்தவை. பொதுவாகச்சகல சீவகோடிகளையும் வெறுக்காது நாம் (மனிதர்) ஏற்ற அளவு அவைகளைப் பாதுகாக்க முன்வருவதே மனமாசுநீந்த மாதேவன் மாணருட் கடலுட் குளிக்க ஏதுவாகும். பசுக்கள் பாங்காக வளர்ச்சிபெறப் பகவனே திருவுளம்பாலிப்பாராக.

---

## கொழும்புத் திட்டத்தின் கீழ் எண்ணெய்ச்சாலை

கொழும்புக் கண்மையில் கொழும்புத் திட்டத்தின் கீழ் ஒரு பிரமாண்டமான எண்ணெய்த் தொழிற்சாலை அமைக்கப்படுகின்றது. நிறைவேறிய பின் இது ஓர் முன்மாதிரியான நிலையமாகுமென்று அறியவருகிறது.

---

## தீப்பெட்டி நெருக்கடி

தீப்பெட்டி ஒன்றுக்கு விலை 3½ சதமென அரசாங்கம் நிச்சயித்தது. ஆனால் நெருக்கடியிருக்க வியாபாரிகள் இப்பொழுதே 5 சதமாய் விற்கின்றனர்.

---

## ஆங்கில ஆசிரியர் பயிற்சி

வருகிற ஆண்டு 1500 பேர் ஆங்கில ஆசிரியர்களாகப் பயிற்றப்படுவர். அரசாங்க ஆசிரிய பயிற்சி நிலையத்தில் பயிற்றப்படுவதற்கு இப்பொழுதே 1000 பேர் தெரிந்தெடுக்கப்படுவர்.

---

## வெள்ளைச் சீனி

நத்தார்க் கொண்டாட்டத்துக்காக வெள்ளைச் சீனி வியாபாரிகளுக்கு 50 விகிதம் கூட்டிக் கொடுக்கப்படும்.

## ஸ்ரீ சாரதாதேவி விழா

1951-ம் ஆண்டு மார்கழி மாதம் 5-ந் திகதி (20-12-51) வியாழக்கிழமை மேற்படி அம்மையாரின் தொண்ணூற்றொன்பதாவது ஜயந்தி விழா வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்திலே நடைபெறும்.

காலை 10-30 மணி தொடக்கம் பூசை பஜனை முதலியன நடைபெறும்.

மாலை 5-30 மணி தொடக்கம் பூசை பிரார்த்தனை முதலியனவும் ஸ்ரீமதி இராசமுத்து சதாசிவத்தின் தலைமையில் சொற்பொழிவுகளும் ஆற்றப்படும்.

## தேவை

கந்தர்மடம் திருநெல்வேலி ஐக்கிய பண்டகசாலைச் சங்கப் புடவைக்கடைக்கு மானேஜர் தேவை சம்பளம் மாசம் 50 ஐம்பது ரூபா ரொக்கப்பிணை 250 இருநூற்றைம்பது ரூபா. விரும்பினோர் தமது தகைமைகளைக் குறித்து 31-12-51 க்கு முன் மனுச்செய்க. ஏனையவிபரங்களை நேரிலறிக.

வே. இராசரத்தினம்
கௌரவ காரியதரிசி
கந்தர்மடம்—திருநெல்வேலி
ஐ. ப. சாலைச் சங்கம்

15-12-51.
M 154 18—21—12


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14 20-11-46—20-11-49. S. கனகசபை, சிறாப்பர்.



| திறமான | திறமான |
| --- | --- |
| **தேக்க மரங்கள்** | **ருணிமார்க்ஓடுகள்** |
| பல தினிசுகளிலும் | 13, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



இலங்கையின்
மிகப்பெரிய
—நகை—
வியாபாரிகள்
=O=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna, or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Tuesday, December 18, 1951.

# புலன்வழிப் போவார் புறவிழாத் தேடுவர்

-ம் பக்கத் தொடர்ச்சி

பெரும் விழாவின் முக்கிய நிகழ்ச்சி "திருக்கூத்தாதும்". மக்களால் நடாத்தப்படும் விழாக்களிலும் ஆடல், பாடல், நடனமென்னுமிவை பெரும் முக்கியத்துவம் வகிப்பதைச் சாதாரணமாகக் காணலாம். நம்முன் விழாவினும் "திருக்கூத்து" முக்கிய நிகழ்ச்சியாதல் நினைத்தின்புறற்குரிய தொன்றாம். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் மறைத்தலாகிய ஐந்தொழில்களையும் இறைவனின் ஆடல்களாகக் கண்டு அவையிற்றைக் "கூத்து" எனும் ஒரு சொல்லில் அடக்கக் கூறுவர் ஆன்றோர். இத்திருக்கூத்தொன்றிலேயே உள்ளத்தையும் உணர்வையும் பறிகொடுத்து அதனைக் காண்பதற்கு அடியார்களும் முனிவர்களுந் தவங்கிடப்பார்கள். இறைவன் பல்வேறு தத்துவங்களில் விளங்குகின்றமையும் அவற்றிற் கிறிது கருத்தூன்றாய் அவனைத் தக்கூத்தனாகக் கண்டே போற்றித் துதித்து மகிழ்வார்கள். அம்பலக்கூத்தன், ஆனந்தக்கூத்தன், மன்றாடி எனப் பலபடப் புகழ்ந்து பாடிப் பரவசமடைவார்கள். வேத காலந்தொட்டு விரித்த இந்து சமய நூல்களெல்லாம் தெய்வக்கூத்தின் மகிமையையே பேசுகின்றன. கூத்தனின் பெருமையையே பாராட்டுகின்றன. தம்முன் விழாவின் சிறப்பும் மாட்சியும் இத்திருக்கூத்தொன்றிலேயே அடங்கிக்கிடக்கின்றது.

### பிறவிப் பெரும் பயன்

அரங்கிற் தோன்றமோர் ஆடல்மான் பூண்ட கோலத்தைப் பார்த்த அளவிலேயே அவன் ஆடவெடுத்துக் கொண்ட வேடந் தெற்றென விளங்கும் அதுபோன்றே பெருட் செல்வர்கள் நமக்குத் தந்தருளிய கூத்தனை நோக்கிய அளவிலேயே அவனின் ஐந்தொழில் ஆடற் தத்துவம் இனிது புலப்படும். சடையிற் தவழும் நீரும் கரத்திற் திகழும் நெருப்பும் மேனியிற் பொருந்திய நீறும், இன்னும் பிறவும் ஐம் பூதங்களும் அவனுள் அடங்கிக் கிடப்பதையும் அவனின் படைத்தற் திறனையுங் குறிப்பாக உணர்த்தும். அபயத் திருக்கரமும் தூக்கிய திருவடியும் அனைத்திறகும் அபயம் அளித்துக் காத்திறகும பண்பினை உணர்த்தும். புலியாடையும யானைப் போர்வையும், மழுப்படையும், எலும்புகளும் அவனின சங்காரத்தொழிலைக் குறிப்பனவாம். இன்னும் அக்கூத்தனின் கோலமும் அணிகளும், ஆடலும், குறிக்குஞ் சத்துவங்கள் எண்ணிறந்தன. மனம் வாக்கிற் கெட்டாத மாண்பின. அவனின் ஐந்தொழிலாடலையும் அவன் அயரும் விழாவினையும் கண்டு களித்தலே பிறவிப்பெரும் பாலாகும்.

### விழவயரும் விமலன்

இங்ஙனம், எல்லா அண்டங்களையுந் தம்முள் அடக்கி விழவயரும் பெருமான் தாம் எல்லாவற்றினுள்ளும் அடங்கி நின்று விழவயர்கின்றான். நுவ்வணுவிலும் அணுவின் நூறிலொரு கூறினுள்ளும் அவன் அடங்கியுள்ளான். இம்முறைமையால் அவன் எம்முள்ளும் நின்று விழவயர்கின்றான். நம்முள் விழா எம்முள் நடைபெறும் அற்புதம் பெரும் மாட்சியாம் அண்டசராசரங்களும் தம்முள் இயங்கும் தத்துவத்தினைக் கண்டு களிப்பவர் ஞானிகள். உயிரை ஒரு கணமும் பிரியாது உள்ளே நின்று அதனை நடாத்தி விழவயர்வான் இறைவன். அஞ்ஞானத்தல் மூழ்கிக்கிடக்கும் உயிரில் அறிவு விளக்கத்தினைத் தோற்றுவித்தருளியும் வெவ்வினைகளாற் தாக்கப்படாது அவற்றைக் காத்தும், காமம், வெகுளி மயக்கமெனும் முக்குணங்களை அடியோடழித்தும்—வேண்டுவனவற்றை வேண்டியபடி அருளியும்—உயிராற்றலுக்கு மேற்பட்ட விடயங்களை அறிந்தியாவண்ணம் மறைத்தும், உயிரின் பக்குவமறிந்து அதனை நடாத்தும் அருள்விழா உள்ளுதொறும் உருக்குவதொன்றும்.

இனி; படைத்தல், காத்தல், அருளல் மறைத்தலெனும் ஐந்தொழிலாடல் புரிந்து இறைவன் விழவயரும் காரணம் யாதென்பது சிந்திக்கவேண்டியதொன்றும். மக்கட்கு மகிழ்ச்சியை ஊட்டவேண்டி விழாக்கள் நடக்கின்றன. எல்லா உயிர்கட்கும் எல்லையில்லாத பேரானந்தத்தை அருளும் பெருநோக்குடன் இறைவன் விழவயர்கின்றான். இயற்கையாகவே இன்பநாட்டமுடைய உயிர் ஆற்றலின்மையாற் செயலற்றுக் கிடக்கின்றது. அதனைப் பிறவியிற் புகுத்தியும், வினைவழிச்செலுத்தியும், சிறு சிறு இன்பதுன்ப அனுபவங்களை அருளியும் ஈற்றில் நித்தியானந்தத்தில் மூழ்கச்செய்தும் இறைவன் பல ஆடல் புரிவன். உயிர்கள் மாட்டுக் கொண்ட எல்லையில்லாத கருணையினால் இறைவன் இடையறாது விழாவயரும் அருட்திறனை நோக்கிய அன்பர்கள் நெக்கு நெக்குருகிப் போற்றுவார்கள். எல்லாம் அவன் செயல் எல்லாம் அவன் ஆடல், எல்லாம் அவன் விழாவெனு முண்மை உணர்ந்து மகிழ்வார்கள். இறைவன் உண்ணின்று விழவயரும் தத்துவத்தினைத் தெளிந்தாரெய்தும் ஆனந்தம் எல்லையில்லாதது. இறைவனின் விழாவினைக் கண்டறிந்தவர்தம் பேறிவு பிறிதொன்றிற் பொருந்தாது.

"ஐந்து பேறிவும் கண்களே
கொள்ள அளப்பரும்
கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு
மூன்றுந் திருந்து
சாத்துவிகமே ஆக
இந்துவாழ் சடையான்
ஆடுமானந்த எல்லையில்
தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட்
திளைத்து மாறிலா
மகிழ்ச்சியில் மலர்ந்தார்"

என்னும் பாடல் இறைவனின் கூத்தை அவன் அருள் விழவைக் கண்டு களித்த பேரன்பர்கள் அடைந்த ஆனந்த நிலையை நன்கு விளக்குகின்றது.

யாமும் இறைவனின் விழாவினைக்கண்டு களித்து இவ்வரிய பேற்றை அடைதல் வேண்டும். எம்முள் நின்று நடனமாடும் முதல்வனின் விழவினை யாம் காணமுடியாதவாறு அறியாமை திரையிட்டிருக்கின்றது. மெய்யுணர்வென்னும் வாளால் இத்திரையை நீக்கி அன்புக்கண்ணால் நோக்குவோமாயின் எம்முள் நடக்கும அருள் விழாவைக் காணலாம். சமயநெறி வழியே சென்று யாமிவ்விழாவினைச் சேர்தல் வேண்டும். அகங்காரம் மமதை யென்னுந் தன்முனைப்பற அகன்று அவன் கூடலெனும் உண்மையைத் தெளிதல் வேண்டும். புறமுகமாக அலைந்து திரியும் அறிவினை மீட்டு அகத்தினுட் செலுத்தி மௌனமாக அமர்ந்து உன்னுதல் வேண்டும். அப்பொழுது தம்முள் விழா எம்முள் நிகழும மாட்சியைக்கண்டு களிக்கலாம். இடையறாதிவ் விழாவிற் கலந்து பேரானந்தமடையலாம். புற விழாக்களைத் தேடி அலைந்து வருந்தி வீணுக்காது தம்முள் விழாவினை யாவரும் கண்டு மகிழ்ந்திட இறைவன் அருள் பாலிப்பானாக.